செ. கு. எண்: 201 நாள் : 30.07.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 30.7.2013

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கேர்பெட்டா புதூர் அருகே 26.7.2013 அன்று காவல் துறை ஜீப் எதிரே வந்த வாகனத்திற்கு வழி விட முனைந்த போது, நிலை தடுமாறி சாலையோர வீட்டின் மீது மோதியதில், ஜீப்பில் பயணம் செய்த ஈரோடு மாவட்டம், பெருந்துறை காவல் நிலைய ஆய்வாளர் திரு. M.விவேகானந்தன் அவர்கள் பலத்த காயமடைந்துள்ளார் என்பதையும், அந்த வீட்டிலிருந்த திரு. ராமலிங்கம் என்பவருக்கு லேசான காயம் ஏற்பட்டது என்பதையும் அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் காவல் துறை ஆய்வாளர் திரு. விவேகானந்தன் அவர்கள் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்த காவல் துறை ஆய்வாளர் திரு. விவேகானந்தன் அவர்களுக்கு 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்த திரு. ராமலிங்கம் அவர்களுக்கு 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9